| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 24/04/2024 | முதல் | 28/04/2024 | |
| அறிக்கை எண் : | 033/ 2024 | வெளியீட்டு நாள் : | | 23/04/2024 | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 39°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –28-04-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/04 | 19/04 | 20/04 | 21/04 | 22/04 | தேதி | நாள்-1 24/04 | நாள்-2 25/04 | நாள்-3 26/04 | நாள்-4 27/04 | நாள்-5 28/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 40 | 40 | 39 | 41 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 41 | 42 | 42 | 41 | 41 |
| 27 | 28 | 28 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 26 | 25 | 26 | 25 |
| 4 | 5 | 4 | 4 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 1 | 2 | 3 | 4 |
| 72 | 88 | 65 | 74 | 62 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 41 | 41 | 46 | 44 | 43 | | 20 | 20 | 20 | 30 | 30 |
| 10 | 7 | 11 | 8 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 10 | 12 | 12 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | **காற்றின் திசை** | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

### குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 41°-42° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

அதிக அதிகபட்ச வெப்பநிலை மற்றும் மிதமான காற்று காரணமாக ஏற்படக் கூடிய ஈரப்பத இழப்பினை ஈடுசெய்ய பயிர்களுக்கு அதிக அளவில் நீர் பாசனத்தினை மேற்கொள்ளவும்.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி

செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (24.04.2024 முதல் 28.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 10 முதல் 12 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பாகற்காய், வாழை,** காய்நடை

**பாகற்காய்:**

நிலவும் பருவச் சூழ்நிலையில் பாகற்காய் பயிரில் முரணை சிலந்தி தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை பூச்சிகளின் தாக்குதலால் இலைகள் சுருண்டும் கொடிகள் வளர்ச்சி குன்றியும் காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி என்ற அளவில் நன்கு புளித்த மோர், 40 கிராம் சூடோமோனஸ், 250 மில்லி இளநீர் ஆகியவற்றை ஒன்றாக கலந்து தெளிக்க வேண்டும். மேற்சொன்ன கலவையை தெளித்த 12 நாட்கள் கழித்தோ அல்லது தாக்குதலின் தீவிர நிலையிலோ 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் புராப்பர்கைட் மற்றும் 10 மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கலாம்.

**வாழை:**

தற்போதைய சூழ்நிலை பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி மற்றும் நெய் பூவன் போன்ற வாழை இரகங்களை (பிப்ரவரி முதல் ஏப்ரல்) நடவு செய்ய ஏற்ற காலமாகும்.

இந்த இரகங்களில் நூற்புழுக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. இதனைக் கட்டுபடுத்த நடவுக்கு வாழைக் கன்றுகளை நூற்புழுக்கள் தாக்காத இடங்களிலிருந்து தேர்வு செய்ய வேண்டும்.

வாழைக் கன்றுகளை நடுவதற்கு முன் கிழங்குப் பகுதியில் உள்ள வேர்கள் மற்றும் கருநிறப் பகுதிகளை கத்தியால் நன்கு சீவிவிட்டு, குழைந்த களிமண்ணில் கிழங்கை முக்கி எடுத்து அதன் மீது 5 கிராம் சூடோமோனஸ் புளூரசென்ஸ் 5 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி 5 கிராம் பேசிலஸ் என்ற உயிரியல் இடுபொருட்களைப் பரவலாகத் தூவி, பின்னர் நட வேண்டும்.

## கால்நடை:

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக் கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.